



# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண். 31

### அறிவிப்புகள்

### 2018–2019

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண். 31

அறிவிப்புகள்

2018 – 2019

**டாக்டர் எம். மணிகண்டன்**

**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**

## 1. இராமநாதபுரம் மற்றும் கடலூர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

தமிழகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்களின் முதலீட்டினைப் பெருக்கிடும் நோக்குடனும், தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களின் தேவைக்கேற்பவும், இராமநாதபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களை உருவாக்கிட தேவையான சாத்தியகூறுகள் கண்டறிந்து அதற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 2. சென்னையில் நிதி தொழில்நுட்ப சிறப்பு மையம் (Centre of Excellence of FinTech in Chennai) அமைத்தல்

நிதித் துறையில் போட்டி, புதுமை, உற்பத்தி திறன் உருவாக்கிடவும் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்திடவும் ஒரு நிதி தொழில்நுட்ப சிறப்பு மையம் சென்னையில் அமைக்கப்படும் (Centre of Excellence of FinTech in Chennai). இந்த நிதி தொழில்நுட்பம் பணம் இலக்கமாக்குதல் (Digitising Money) மட்டுமல்லாமல் நாணய தரவையையும் (Monetising Data) ஏற்படுத்தும்.

இந்த நிதி தொழில்நுட்பம் அனைத்து வணிகத்தில் உதவிடும் வகையிலும் முக்கியமாக சிறு தொழில் வணிகத்திற்கு, சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு மற்றும் வேலை வாய்ப்பினை மேம்படுத்திடவும் நிதி உதவி அளிக்கும்.

மத்திய அரசு, தமிழக அரசு மற்றும் துணிகர மூலதன நிதியம் (Venture Capital Fund) ஆகியவைகள் இணைந்து முறையே ₹ 5.75 கோடி, ₹ 5.75 கோடி மற்றும் ₹ 11.50 கோடி முதலீட்டில் ஒரு நிதி தொழில்நுட்பம் முதன்முறையாக சென்னையில் அமைக்கப்படும்.



## 3. முதலமைச்சர் முகப்புப் பக்கம் (CM DASH BOARD)

பல்வேறு துறைத் திட்டங்களின் வகையிலான முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளின் காட்சித் தோற்றத்திற்கு முன்முயற்சிக்கான முதலீட்டுத் திட்டமாக முதலமைச்சர் முகப்பு பக்கம் (CM DASH BOARD) உள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம், அனைத்து முக்கிய துறைகளிலும் செயல் திறனை மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் திறம்பட கண்காணிக்க இயலும்.

இந்தத் திட்டமானது அனைத்து மாண்புமிகு அமைச்சர்களுக்கும் செயலாளர்களுக்கும் துறைத் தலைவரின் செயலாற்றலுக்கும் கோரிக்கை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த திட்டம் ₹ 122 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## 4. எல்காட் இ–மார்க்கெட் (ELCOT e-Market)

“எல்காட் இ–மார்க்கெட்” (ELCOT e-Market), அரசுத் துறைகளுக்கு ஆன்லைன் வாயிலாக அனைத்து தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த வன்பொருள், மென்பொருள் மற்றும் சேவைகளை வழங்குகிறது. அரசுத் துறைகள் இந்த இணையவழி கொள்முதல் முறையைப் பயன்படுத்தி, எல்காட்டின் பதிவு பெற்ற விற்பனையாளர்கள் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளைத் தெரிவு செய்து, அதன் விவரங்களை அறிந்து, ஒப்பிட்டுப் பார்த்து, தங்களுக்குத் தேவையான பொருட்களின் விவரம் மற்றும் விலை அடிப்படையில் தெரிவு செய்து கொள்ளலாம். மேலும் உத்தேச விலைப் பட்டியல் (Proforma Invoice) தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

எல்காட் இ–மார்க்கெட் மூலம் அரசுத் துறைகள் மற்றும் ஒப்பந்த விற்பனையாளர்கள் முன்னணி இ–காமர்ஸ் நிறுவனங்களுக்கு நிகரான சேவையைப் பெற்று பயன்பெறுவர்.

இத்திட்டம் ₹ 30 இலட்சம் மதிப்பீட்டில் எல்காட் மூலம் செயல்படுத்தப்படும்.



## 5. செயற்கை நுண்ணறிவு மற்றும் இணையதள பொருள் கருத்துகளம் (Artificial Intelligence (AI) and Internet of Things (IoT) -Tech Forum)

தமிழகத்தில், தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் துறையில் நூதன தொழில்நுட்பத்தை நிறுவனங்கள் மிகுந்த அளவில் பயன்படுத்த வேண்டியுள்ளதால் ஒரு தொழில்நுட்ப கருத்துக்கள வசதி (Tech Forum Facility) தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலம் அமைக்கப்படும்.

இந்தத் தொழில் நுட்ப கருத்துக்கள வசதியினை உருவாக்குவதன் மூலம் தமிழகத்தில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இணைய தள பொருள் (Internet of Things), எந்திர கற்றல் (Machine Learning) மற்றும் மின்னணு வன்பொருள் தயாரித்தல் (Electronic Hardware Manufacturing) துறைகளில் தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன் மிகுந்த அளவில் வேலை வாய்ப்புகளையும் அளிக்கும்

## 6. இணையவழியில் அனைத்து இ–சேவைகளை வழங்குதல்

மின் சேவைகள் பொதுச் சேவை மையங்கள் மூலமாக மட்டுமே வழங்கப்படுகின்றன. இந்தச் சேவையைப் பெற பொதுமக்கள் CSC மையங்களுக்கு வரவேண்டும்.

இப்போது நேரடியாக பொதுமக்களுக்கு கூடுதலாக ஆன்லைன் சேவையை வழங்குவதற்கு வழிவகை செய்யப்படும்.

இந்த வசதி மூலம் பொதுமக்கள் எந்தவொரு இடத்திலும் எந்த நேரத்திலும் (24x7) இச்சேவைகளைப் பெற முடியும்.



## 7. இணைய வழி கணினித் தமிழ்ப் பாடத்திட்டம் (Online Tamil Computing Course)

இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் தமிழ் மொழியைக் கணினிக்குக் கொண்டு செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். இதனைக் கருத்தில் கொண்டு தமிழ் இணையக் கல்விக்கழகம் கணினித்தமிழ்ப் பாடத்திட்டத்தினைப் பட்டயப் படிப்பாக (Diploma Course) இணைய வழியில் பயிற்றுவிக்கும். இதனால் மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் பயன்பெறுவார்கள். இப்பாடத்திட்டம் ₹ 20 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

## 8. அரசுத் துறைகளுக்கான தொழில்நுட்ப உதவி

தகவல் தொழில்நுட்பம், அரசு துறைகள் சிறந்த முறையில் இயங்குவதற்கான முதுகெலும்பாக விளங்குகிறது. இதற்காக தகவல் தொழில்நுட்பத் திறமை வாய்ந்த மனிதவளம் தேவைப்படுகிறது. இதனை நிறைவேற்றிடும் வகையில் மின் ஆளுமை இயக்குநரகம் தகவல் தொழில்நுட்பத் திறமை வாய்ந்த மனிதவளம் தேவைப்படும் அரசுத் துறைகளுக்கு தகவல் தொழில்நுட்ப பணியாளர் தொகுப்பிலிருந்து (IT Cadre) பணியாளர்கள் வழங்கப்படும்.



## 9. மாவட்டங்களின் இணையதளங்களைத் தர நிலைப்படுத்துதல்

மாவட்டங்கள் தற்போது பயன்படுத்தி வரும் இணையதளங்களைத் தரநிலைப்படுத்தி அனைத்து மாவட்டங்களுக்கும் ஒரு சரிபார்க்கப்பட்ட உள்ளடக்க மேலாண்மை முறையுடன் ஒரு வலை தளத்தைச் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) வாயிலாகச் செயல்படுத்தப்படும்.

## 10. அனைத்து வலைத்தளங்களுக்கான பாதுகாப்பு தணிக்கை

அரசுத் துறைகளின் இணையதளங்களை உரிய கால இடைவெளியில் தணிக்கை செய்வது மிக அத்தியாவசியமாக உள்ளது. இதனால் சைபர் அட்டாக்கிலிருந்து வலைத்தளங்கள் பாதுகாக்கப்படும்.

எனவே, அனைத்து அரசு வலைத்தளங்களுக்கும் பாதுகாப்பு தணிக்கை செய்யப்படும்.



## 11. பொதுமக்கள் விரும்பும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை உலகெங்கிலும் இருந்து பார்வையிட OTT (Over The Top) சேவை அறிமுகப்படுத்தப்படும்

தமிழ் நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சந்தாதாரர்களுக்கு கூடுதலாக OTT (Over The Top) சேவை மூலம் தாங்கள் விரும்பும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், அரசின் பல்துறை சார்ந்த நிகழ்ச்சிகள் மற்றும் இதர நிகழ்ச்சிகளை உலகில் எங்கிருந்தபடியும் மேகக் கணினியம் (Cloud Computing), அலைபேசி (Mobile), தொடுபலகை (Tablet), கணினி (Desktop Computer), மடிக்கணினி (Laptop) போன்ற பல்திரைகருவிகள் மூலம் கண்டுகளிக்கும் வசதி வழங்கப்படும். இச்சேவையின் மூலம், துவக்கத்தில் 50 முதல் 100 தொலைக்காட்சி சேனல்கள் வழங்கப்படும்.

**டாக்டர் எம். மணிகண்டன்**

தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்

தமிழ்நாட்டில் விரைவான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுவருவதன் மூலமாக அனைத்து மக்களும் பயனடையும் வகையில் பாதுகாப்புடன் கூடிய மிகுந்த வளர்ச்சிக்கான உந்துசக்தியை உருவாக்குவதே எனது எதிர்கால தொலைநோக்குப் பார்வையாகும்.

– மாண்புமிகு புரட்சித் தலைவி

**அம்மா** அவர்கள்